**செய்தி வெளியீடு எண்.170** **நாள். 29.03.2018**

## தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் தனியார் துறையில் வேலைவாய்ப்பு முகாம், ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருநின்றவூரில் 29.03.2018 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும், திருவள்ளூர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இம்முகாமில், FEATHERLITE, TEX Bio Sciences, SAM Technology, SAMSUNG, SALCOMP, WIPRO, TVS GROUP, MARUTI SUZUKI GROUPS, GO TECH, UTL TECHNOLOGY, APPOLLO HOSPITAL உள்ளிட்ட 56 வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டனர். 2160 வேலைநாடுநர்கள் வருகை புரிந்தனர். இவ்வேலைவாய்ப்பு முகாம் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சென்னை மண்டல இணை இயக்குநர் திருமதி.வி.மீனாட்சி அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலை பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் கலந்துக்கொண்டு வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு தனியார் நிறுவனங்களால் 252 வேலைநாடுநர்களுக்கு பணி நியமண ஆணைகளை வழங்கி விழா பேருரையாற்றினார்.

மேலும் இம்முகாமில், 71 வேலைநாடுநர்கள் அடுத்த நிலைக்கு தேர்வு பெற்றனர். இச்சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தேசிய திறன் வளர்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக திறன் பயிற்சி பெற 104 மனுதாரர்கள் விருப்பம் தெரிவித்து தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

இம்முகாமிற்கு வருகை புரிந்தவர்களை ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ் பேராசிரியர் திருமதி.எஸ்.சுதா அவர்கள் வரவேற்றார். நிகழ்ச்சியின் முடிவில் திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.வே.சீனிவாசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

இம்முகாம் கிராமப்புற இளைஞர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருந்ததென இதில் கலந்து கொண்ட இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**செய்தி வெளியீடு - செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**